# மணக்கால் நம்பி
# வாழி திருநாமம்

உய்யக்கொண்டார் அடியை உகந்தடைந்தோன் வாழியே
ஒப்பில் மணக்கால் பதியில் உதித்தருள்வோன் வாழியே
துய்ய கும்ப மக நாளில் தோன்றலுற்றோன் வாழியே
துயரில் குணக் குழுவாகிச் சகம் புகழ்ந்தோன் வாழியே
ஐயமற ஆளவந்தார்க்கு அருள் புரிந்தோன் வாழியே
அவர்ப்பணிய அரங்கன் அடி நிதி கொடுத்தான் வாழியே
செய்ய தமிழ் மாலைகளைச் சிந்திப்போன் வாழியே
சீர் மணக்கால் நம்பிகள் தம் சேவடிகள் வாழியே

---